<u>O.S.No. 260/2018</u>

<u>PW 2 : கவிதா</u> தேதி 16.02.2026

<u>வாசா 2 சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு, 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

நான் வாதி கணவரின் சகோதரி. நான் **MBA** படித்திருக்கிறேன். இவ்வழக்கில் வாதி என்ன வழக்கு தாக்கல் செய்திருக்கிறார் பிரதிவாதி தரப்பில் என்ன எதிர் உரை தாக்கல் செய்திருக்கிறார்கள் என்று நான் படித்து பார்த்து தெரிந்து கொள்ளவில்லை என்றால் சரிதான். சொத்து பத்திரம் எதுவும் கொடுக்கவில்லை நான் பார்க்கவில்லை. வாதியின் சகோதரர்கள் இருவரும் அவரிடம் பிரச்சனை செய்து கொண்டிருப்பதாகவும் அதனை குறித்து சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். வாதியிடம் அவரது சகோதரர்கள் இவ்வழக்கை திரும்ப வாங்கும் படி சொல்கிறார்கள். பாகப்பிரிவினை செய்ய வேண்டும் என்று வாதி என்னிடம் சொல்லியிருந்தார். நான் உடன் செல்லவில்லை. பத்திரம் எழுதிய விவரம் எனக்கு நேரடியாக தெரியாது. என்னுடைய சகோதரர் குடிப்பழக்கத்திற்கு ஆளாகி இறந்துவிட்டார். அவருக்கு வைத்தியம் செய்ததற்கான ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் தாயார் தான் வாதியின் குடும்பத்தை பராமரித்து வந்தார். என் சகோதரர் 45 வயதில் இறந்துவிட்டார். அவர் உடல் நலம் சரியில்லாமல் இறந்துவிட்டார் என்றால் சரியல்ல. பாகப்பிரிவினை பத்திரமும் கொடுக்கவில்லை. என்ன பத்திரம் செய்தார்கள் என்று நான் பார்க்கவில்லை. ஒரு வருடமாக பத்திரம் கொடுக்கவில்லை. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக நகல் எடுத்து பார்த்த போது தான் தானசெட்டில்மென்ட் பத்திரம் எழுதிய விவரம் தெரிய வந்தது. சுதா 1 மற்றும் 2 பிரதிவாதிகளுக்கு தானசெட்டில்மென்ட் எழுதிய விவரம் அப்போது தான் தெரிய வந்தது. 1 மற்றும் 2 பிரதிவாதிகள் வாதியை நிலத்திற்குள் அனுமதிப்பதில்லை என்றால் சரியல்ல. வாதியும் சுவாதீனத்தில் தான் இருக்கிறார். வாதி ஓடத்துறையில் குடியிருக்கிறார். தாவா சொத்து

குமலன்குட்டை இடையன்காட்டு வலசில் உள்ளது. என்னுடைய அப்பாவிற்கு 2 ½ ஏக்கர் பூமி உள்ளது. தாவா சொத்திற்கும் வாதிக்கும் சம்மந்தம் இல்லை என்றும் வாதி என் நாத்தனார் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதி அவருடைய சகோதரர்கள் ஏமாற்றி தானசெட்டில்மென்ட் பத்திரம எழுதி கொண்டதாக பதிவாளர் அலுவலகத்தில் புகார் கொடுக்கவில்லை என்றால் உடனடியாக இவ்வழக்கை தாக்கல் செய்துவிட்டார். நான் சொல்வது போல் வாதியிடம் 1 மற்றும் 2 பிரதிவாதிகள் ஏமாற்றி வாங்கி கொண்டார்கள் என்று சொல்வது பொய் என்றும் வாதி விருப்பப்பட்டு தானசெட்டில்மென்ட் எழுதி கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல. தானசெட்டில்மென்ட் பத்திரம் எழுத நான் போகவில்லை என்றும் அதை மோசடியாக பெற்று கொண்டதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.